**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**
**முன்னிலை: திரு.K.N.குரு, பி.ஏ.,பி.எல்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**
2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24–ஆம் நாள் புதன்கிழமை
**அசல் வழக்கு எண்.92/2024**
**(அம்பாசமுத்திரம் அ.வ.எண்.197/2019)**
(CNR No.TNTS060007542024)

சரஸ்வதி அம்மாள் ..... வாதி

/எதிர்/

1.லெஷ்மி அம்மாள்
2. முப்புடாதி
3. முருகன்
4. அருள்அம்மாள்
* 5. ஏசுதாசன் (இறப்பு)
6. சின்னப்பன் பெஸ்ட்
7. ஜோசப்ராஜ்
*8.அந்தோணியம்மாள்
*9. பாக்கியம்
*10. யாக்கோபு
*11. திவாகர்

..... பிரதிவாதிகள்

*(Amended as per order in I.A.No.6/2023, Dated 13.10.2023)

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (24.09.2025) விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தங்கத்துரை அவர்கள் முன்னிலையாகியும், 4, 6 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.செல்வராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 5ம்பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், வாதி தரப்பு ஆஜராவதற்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினாலும், வாதியை அழைத்தும் ஆஜராகாததாலும், வாதியின் வருகையின்மைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

பிராது தபசில் சொத்துக்களில் வாதிக்கு சட்டப்படி கிடைக்க கூடியதான 1/6 பாகத்தை நட்டு, திட்டு பார்த்து கறார் பாகப்பிரிவினை செய்து தனித்த சுவாதீனம் செய்துதரும்படிக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கொடுத்து உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும், இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

LW1 not present. The suit is pending since 2019. The matter is in trial stage since 2024. Hence the suit is dismissed for non prosecution.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.